This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# காந்தளூர் வசந்தகுமாரன் கதை

## 1

கடற்கரையில் அந்தக் குதிரைவணிகனைச் சந்திக்கச் சென்ற வசந்தகுமாரன், அன்றைய இரவின் நிகழ்ச்சியின் அதிர்ச்சியை எதிர்பார்க்கவில்லை. கடல் கடந்து குதிரை விற்க வந்திருக்கிறான் பச்சைக் கண்ணன். வாணிபத் திறமையின் ஓர் அங்கமாகத் தமிழும் பேசுகிறான். அவன் கொண்டு வந்திருக்கும் உதாரணக்குதிரை வெளுத்த மேகம்போல் வெண் மணற்பரப்பில் நின்றது. 'என்ன விலை வேண்டும்' என்றபோது, பச்சைக் கண்ணன் தன் கையில் இருந்த மஞ்சாடிகளைக் காட்டி, "இதில் பத்து போதும்" என்றான். வசந்தகுமாரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனுக்கு நம்பிக்கையில்லை. சுலபமாக அந்தக் குதிரைக்கு நான்கு கழஞ்சு கொடுப்பார்கள் என்று ஒரு இவுளி (குதிரை) மறவரிடம் கேள்விப்பட்டிருக்கிறான். வசந்தகுமாரனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. 'என் இருணமெல்லம் தீர்ந்தது, எனக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது.' தன்னிடம் இருந்த கடைசி மாடையை எடுத்துக் காட்டினான். "இதன் மதிப்பு இருபது மஞ்சாடி. நீ காட்டுவது பத்து மஞ்சாடி! (ஒரு மஞ்சாடி=2 குன்றிமணிகள், 20 மஞ்சாடி=1 கழஞ்சு(மாடை) 1 காசு=1/2 கழஞ்சு)

"எனக்கு ஒரு குதிரைக்குப் பத்து மஞ்சாடி போதும்." என்றான் யவனன்.

"வேறு என்ன வேண்டும்?"

"பெண்கள். சோழ தேசப் பெண்கள்."

"அதற்குத் தஞ்சைக்குப் போக வேண்டும். தளிச்சேரிப் பெண்டுகள், கதியிலார், கோயிற்–பிணாக்கள் (தளிச்சேரிப் பெண்டுகள், பதியிலார், கோயிற் பிணாக்கள் : நடனியர்) என்ற நானூறு பேர் உள்ளனர். ஒவ்வொருத்திக்கும் கூலி, ஒரு வேலி நிலம்! அரண்மனை நடனிகள் வேண்டுமா? கோயில்களில் ஆடுவோர் வேண்டுமா?"

"தனிப்பட்ட சில இல்லங்கள் உள்ளதாமே, இவ்வூரிலேயே!"

குமாரன் அவனை ஆச்சரியமாகப் பார்த்து, "யவனனே, நீ நிறையவே அறிந்திருக்கிறாய். இதற்கு முன் குதிரை விற்க வந்திருக்கிறாயா?"

"ஆம். என்னை ஒரு குடுமிக்காரன் ஏமாற்றிவிட்டான். அவனைத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்றுவிட வேண்டும்" என்ற அவன் முகம் சற்று இறுகியது.

தொடர்ந்து "உனக்கு எப்படிப் பெண்களின் எண்ணிக்கை கூடத் தெரிந்திருக்கிறதே?